இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 283 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 11 – திங்கள்கிழமை 25 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 283 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 11 - Monday 25 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00




கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (23.5.2026) அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மற்றும் இளைஞர் அணி மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். முன்னதாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## கழகத் தலைவர் வழியில் இன்னும் சிறப்பாகச் செயல்படுவோம்!

## சமூக ஊடகங்களில் வேகத்துடன் இருங்கள் – கழக அரசு செய்த திட்டங்களை அழுத்தமாகப் பதிவிடுங்கள்!

# நமக்கு இனிமேல் புதுப்புது களங்கள் காத்திருக்கின்றன! தயாராவோம்!

## கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, மே 25 –

**கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் கழகத் தலைவர் வழியில் இன்னும் சிறப்பாகச் செயல்படுவோம் எனவும் சமூக ஊடகங்களில் வேகத்துடன் இருங்கள் – கழக அரசு செய்த திட்டங்களை அழுத்தமாகப் பதிவிடுங்கள் எனவும் நமக்கு இனிமேல் புதுப்புது களங்கள் காத்திருக்கின்றன அதற்கு நாம் தயாராவோம் எனவும் குறிப்பிட்டார்.**

அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு: -




"ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில், இந்த இளைஞர் அணிக் கூட்டம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சட்டமன்றத் தேர்தலில் யாருமே எதிர்பார்க்காத ஒரு தேர்தல் முடிவு நமக்கு வந்திருக்கிறது. முதலில் நமக்கு மட்டுமே ஏமாற்றமாக இருந்த அந்தத் தேர்தல் முடிவு, நாளாக நாளாக இன்று ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களுக்குமே ஒரு மிகப்பெரிய ஏமாற்றமாக ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டிருக்கிறது.

### தலைவரின் அறிவுறுத்தல்

இந்தச் சூழலில், நம்முடைய தலைவர் அவர்கள், ரிசல்ட்டுக்குப் பிறகு, முதலில் மாவட்டக் கழகச் செயலாளர்களையெல்லாம் வரச் சொல்லி இதே அரங்கத்தில் சந்தித்தார்கள். அதன் பிறகு, `உடனடியாக நம் இளைஞர் அணி தம்பிமார்களையெல்லாம் நான் சந்திக்க வேண்டும், நீ உடனே இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்' என்று என்னிடம் அறிவுறுத்தினார்கள். அந்த அடிப்படையில்தான் இன்று இந்தக் கூட்டம் இங்கே இவ்வளவு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

முதலில் தேர்தலில் வெற்றி வாய்ப்பை நாம் இழந்ததனால், நீங்களெல்லாம் கொஞ்சம் அப்செட்டாக இருப்பீர்கள். உங்களையெல்லாம் உற்சாகப்படுத்த வேண்டும் என்றுதான் நான் வீட்டிலிருந்து காரில் கிளம்பும்போது நினைத்துக்கொண்டு வந்தேன். ஆனால், இங்கே வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது நீங்களெல்லாம் என்னையும் தலைவரையும் உற்சாகப்படுத்துவதற்காக தமிழ்நாடு முழுவதிலும் இருந்து கிளம்பி வந்திருக்கிறீர்கள் என்று.

### மரியாதை கூடியிருக்கிறது

நாம் தேர்தல் களத்தில் தோற்றிருக்கலாம், ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான மரியாதை இன்று பல மடங்கு கூடியிருக்கிறது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், தேர்தல் முடிந்த உடனே, வாக்கு எண்ணிக்கை முடிந்த உடனே, நான்காம் தேதி, இரவு, வெற்றி வாய்ப்பைப் பெற்ற நம் சட்டமன்ற

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தமிழ்நாட்டையே உலுக்கிய சம்பவம்!

# கோவையில் பத்து வயது சிறுமி கடத்திக் கொடூரக் கொலை!

## த.வெ.க. பதவியேற்ற பத்து நாட்களிலேயே சட்டம் — ஒழுங்கு படும்பாடு!

சூலூர், மே 25 -

**கோவையில் 5ம் வகுப்பு மாணவியை கடத்தி பலாத்காரம் செய்து கொடூரமாக கொன்று குளத்தில் வீசிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ளது பள்ளபாளையம். இங்குள்ள பாரதிபுரத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலாளி தம்பதி. இத்தம்பதிக்கு 10 வயது மகள் உண்டு. இவர்கள் குடும்பத்துடன் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தான் போத்தனூரில் இருந்து இங்கு குடியேறினர். தம்பதியின் மகள் போத்தனூர் பகுதியில் உள்ள பள்ளியில் கடந்த ஆண்டு நான்காம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றார். அங்கிருந்து மாற்றுச்சான்றிதழ் வாங்கி வந்த நிலையில் ஐந்தாம் வகுப்பிற்கு கண்ணம்பாளையம் பள்ளியில் சேர்க்க பெற்றோர் முடிவு செய்தனர்.

இந்நிலையில், மாணவி 21ம் தேதி இரவு 7 மணி அளவில் அருகில் உள்ள கடைக்கு செல்வதாக கூறிச் சென்றார்.

அதன்பின், அவர் வீடு திரும்பவில்லை. அதிர்ச்சியடைந்த பெற்றோர் கடைக்கு சென்று விசாரித்தனர். அப்போது, ஒரு வாலிபர், மாணவியை பைக்கில் ஏற்றிச்சென்றதாக தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பெற்றோர் சூலூர் போலீசில் புகார் அளித்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும், எஸ்.பி. கார்த்திகேயன் உத்தரவின் பேரில் 5 தனிப் படைகள் அமைத்து மாணவியை தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில் அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமரா காட்சிகளை ஆராய்ந்தபோது மாணவியை கடத்தியது அதே பகுதியில் வசிக்கும் தொழிலாளி கார்த்திக் (33) என்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில், அவரை பிடித்து விசாரித்த போது அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தார்.

தீவிர விசாரணையில் அவர் மாணவியை கடத்திச்சென்று பலாத்காரம் செய்து கொன்று விட்டதாகவும், உடலை வீட்டில் இருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள கண்ணம்பாளையம் குளத்தில் வீசி விட்டதாகவும் தெரிவித்தார். இதனால், அதிர்ச்சியடைந்த போலீசார், மோப்ப நாய் உதவியுடன் சம்பவ இடத்துக்கு சென்றனர். அங்கு மாணவியின் சடலத்தை மீட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் எஸ்.பி. மற்றும் டி.ஐ.ஜி. சாமிநாதன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

### காவல்நிலையம் முற்றுகை!

இதனிடையே, மாணவியின் உடலை வாங்க மறுத்து பெற்றோர் மற்றும் உறவினர்கள் காவல்நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பதற்றம் நிலவியது. அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்க ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். மாணவியை கடத்தி பலாத்காரம் செய்து கொடூரமாக கொன்று வீசிய சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### கும்பல் வெறிச்செயலா?

மாணவியை, கார்த்திக் தான் பலாத்காரம் செய்து கொன்று வீசினாரா? அல்லது கும்பலே இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளதா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டது.

இதனையடுத்து கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவக்குழுவினர் சடலத்தை தொடாமல் பாதுகாப்புடன் எடுத்துவரும்படி கூறினர்.

அதன்படி, மாணவியின் சடலத்தை போலீசார் பத்திரமாக மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உடலை பெற்றோரிடம் காட்டாமல் கொண்டு செல்வதாக பெற்றோர் கதறி அழுது குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து காவல் நிலையம் முன் பெற்றோர், உறவினர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.